## பெப்ரவரி - 16- வியாழன்
### புனிதர் ஓனேசிமுஸ்
### திக்கற்றவர்களின் வேண்டுதலுக்கு அவர் செவிகொடுப்பார்: அவர்களின் மன்றாட்டை அவமதியார். திபா. 102:17

-----------------------------------------------------------------

### முதல் வாசகம்: தொடக்க நூல் 9: 1- 18

பின் கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள். பூமியின் எல்லா உயிரினங்களும், வானத்துப் பறவைகள் அனைத்தும் பூமியின் மீது நடமாடுகிற மற்றுமுள்ள யாவும் உங்கள் முன்னிலையில் அஞ்சி நடுங்குவனவாக. (அன்றியும்) கடலிலுள்ள எல்லா மீன்களும் உங்களுக்கு கையளிக்கப் பட்டிருக்கின்றன. உயிரும் அசைவும் கொண்டுள்ள யாவும் உங்களுக்கு உணவாய் இருப்பனவாக. பசும் புற்பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல் அவையெல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தோம். ஆயினும், இறைச்சியை அதன் இரத்தத்தோடு உண்ணாதிருப்பீர்களாக. ஏனென்றால், உங்கள் உயிரின் இரத்தத்துக்காக எல்லா உயிரினங்களிடத்தும் மனிதனிடத்தும் பழிவாங்குவோம். மனிதனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடம் பழிவாங்குவோம். மனித இரத்தத்தைச் சிந்துபவன் இரத்தமும் சிந்தப்படும். ஏனென்றால், மனிதன் தெய்வச் சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான். நீங்களோ பலுகிப் பெருகிப் பூமியில் பரவி அதனை நிரப்புங்கள் (என்றருளினார்). மேலும் கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களையும் நோக்கி: இதோ, நாம் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியாரோடும், பெட்டகத்திலிருந்து வெளியேறி உங்கள் அண்டையிலிருக்கிற பறவைகள், வீட்டு மிருகங்கள், மற்றும் பூமியிலுள்ள காட்டு விலங்குகள் முதலிய எல்லா உயிரினங்களோடும் நமது உடன்படிக்கையை நிறுவுவோம். உங்களோடு நாம் உடன்படிக்கை செய்வோம். ஆதலால், இனி மாமிசமெல்லாம் வெள்ளப் பெருக்குகளால் ஒருபோதும் அழிக்கப்படா. உண்மையில், பூமியைப் பாழாக்க இனி வெள்ளப் பெருக்கு வராது என்றருளினார். மேலும் கடவுள்: நமக்கும் உங்களுக்கும், உங்களுடனிருக்கும் எல்லா உயிரினங்களுக்கு மிடையே நித்திய தலை முறைகளுக்கென்று நாம் செய்து கொள்ளும் உடன்படிக்கையின் அடையாளமாவது: நமது வில்லை மேகங்களிலே வைப்போம். அதுவே நமக்கும் உலகத்துக்கு மிடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாகும். ஆதலால், நாம் வானத்தை மேகங்களால் மறைத்திருக்கும் போது நம்முடைய வில் அங்குக் காணப்படும். அப்போது உங்களோடும் எல்லா உயிரினங்களோடும் (செய்து கொண்ட) நமது உடன்படிக்கையை நினைவு கூருவோமாகையால், இனி எல்லா உயிர்களையும் அழிக்கும் வெள்ளப் பெருக்கு இராது. வில் மேகங்களில் தோன்றும். அதைக்கண்டு, கடவுளாகிய நமக்கும், உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்குமிடையே ஏற்பட்ட நித்திய உடன் படிக்கையை நினைத்தருள்வோம் (என்றார்). கடைசியாகக் கடவுள் நோவாவை நோக்கி: நமக்கும் உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்திற்குமிடையே நாம் செய்துள்ள உடன்படிக்கையின் அடையாளம் அதுவேயாம் என்று சொல்லி முடித்தார். பெட்டகத்திலிருந்து வெளியேறிய நோவாவின் புதல்வர்கள் சேம், காம், யாப்பேத் என்பவர்களாவர். காம் கானானின் தந்தை.

**பதில்பாடல்:** ஆண்டவர் விண்ணுலகினின்று வையகத்தைக் கண்ணோக்கினார்

### நற்செய்தி: மாற்கு 8:27 – 33

அக்காலத்தில் இயேசு தம் சீடருடன் பிலிப்புச் செசரியாவைச் சார்ந்த ஊர்களுக்குப் புறப்பட்டுப் போனார். வழியில் தம் சீடரை நோக்கி, "மக்கள், என்னை யாரென்று சொல்லுகிறார்கள்?" எனக்கேட்டார். அதற்கு அவர்கள், "சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் இறைவாக்கினர்களுள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றனர். பின் அவர், "நீங்களோ என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார். இராயப்பர் மறுமொழியாக, "நீர் மெசியா" என்றார். தம்மைப்பற்றி யாருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். மேலும் மனுமகன் பாடுகள் பல படவும் மூப்பராலும், தலைமைக்குருக்களாலும், மறைநூல் அறிஞராலும் புறக்கணிக்கப்பட்டுக் கொலையுண்டு, மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டுமென அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இதெல்லாம் வெளிப்படையாகச் சொன்னார். இராயப்பர் அவரைத் தனியாக அழைத்து அவரைக் கடிந்துகொண்டார். அவர் தம் சீடர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து, "போ பின்னாலே, சாத்தானே, ஏனெனில், உன் கருத்துகள் கடவுளுடைய கருத்துகள் அல்ல, மனிதனுடைய கருத்துகளே" என்று இராயப்பரைக் கடிந்துகொண்டார்.

**தியானம்:** இன்று நாம் இவ்வுலக வாழ்வோடு போர் செய்து களைத்தோமோ இல்லையோ, நம்மைச் சுற்றியுள்ள இச்சைகளோடு போராடி நாமும் களைத்து நமது கண்களையும் நாமே குருடாக்கிவிட்டோம். நாம் போய்ச் சேரவேண்டிய இடத்தின் தரிசனங்களையும், கண் காட்சிகளையும் காணக்கூடாதபடிக்கு நமது கண்கள் பூத்துப் போய்விட்டன. நடக்கவேண்டிய வழியைத் தவறவிட்டவர்களும் செல்லும் வழியே சிறந்தது என்று ஏமாந்தவர்களும் நம்மில் அநேகர். இந்த நிலை நோவாவின் காலத்திலும் ஏற்பட்டிருந்தது. அக்கிரமங்களால் காணப்பட்ட உலகை, நீரினால் அழித்து மீண்டும் ஓர் உன்னதமான மனிதகுலத்தை உருவாக்க ஆசைப்பட்ட ஆண்டவனுக்கு மீண்டும் மீண்டும் ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. இன்றைய இரண்டாம் வாசகத்தில் இயேசுதம் சீடரிடம் நான் யார்? என்ற கேள்வியை கேட்கின்றார். அதற்கு இராயப்பர் நீர் மெசியா என எடுத்துரைத்தார். இயேசுக்கிறிஸ்து கடவுளின் மகன் என்பதை நாம் என்றும் எம் உள்ளத்தின் ஆழத்தில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை முட்களின் நடுவே மலரும் அழகிய ரோஜா மலருக்கு ஒப்பானது. அந்த மலரைப் பறிக்கும் பொழுது வேதனை, போராட்டம், என்ற முட்கள் குத்தச் செய்யும். ஆனால் பறித்த பின்பு தான் அதன் அழகையும், நறுமணத்தையும் உணரமுடியும். ஒரு சுவர் உன்கெதிராக எழும்புமானால் நீ அதைத் தாண்டிக் குதிக்க வேண்டும். எனவே மனிதருக்கு ஏற்றவை பற்றி எண்ணி எமது வாழ்வை அமைக்க இறைவனிடம் வரம் வேண்டுவோம்.